பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 24 வெள்ளிக்கிழமை 10.12.2021 கதிர் 263

## விறகு தேடிக் காடு சென்ற வயோதிபப் பெண் மாயம்!

நுவரெலியா மாவட்டம், வலப்பனை - கும்புக்வெல பகுதியில் விறகு சேகரிக்கச் சென்ற பெண் ஒருவர் காணாமல்போயுள்ளார்.

கும்புக்வெல - மெதிலந்த பகுதியில் வசித்த 72 வயதான பீ.எம். டிங்கிரி 2

## பஸில் வந்ததால் நிதி நெருக்கடி தீர்ந்ததா?

### அரசிடம் அநுரகுமார கேள்வி



பஸில் ராஜபக்ஷவுக்கு ஏழு மூளைகள் உள்ளன. அவர் நிதி அமைச்சரானால் நிதி நெருக்கடி தீரும் என ஆளுங்கட்சியினர் பிரசாரம் செய்தனர். இன்று பஸில்தான் நிதி அமைச்சர். ஆனால், நிதி நெருக்கடி அதிகரித்துள்ளது.

- இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றிய அவர்,

பஸில் வந்தால் செல்வம் பெருகும் என்றார்கள். அது நடக்கவில்லை. அதன்பின்னர் 2



சர்வதேசமே நீதியைத் தா!

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் யாழில் போராட்டம்

(இ.கலையமுதன்)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் இன்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சர்வதேச மனித உரிமைகள் தினம் டிசம்பர் 10ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்ற நிலையில், யாழ்ப்பாணம் நாவலர் வீதியிலுள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் அலுவலகத்துக்கு முன்னால் இன்று 2

# அரசின் பலம் மீண்டும் நிரூபணம்; பஸிலின் 'பட்ஜட்' நிறைவேற்றம்!



## ஆதரவு 157, எதிர்ப்பு 64

**2022ஆம் நிதியாண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் 3ஆம் வாசிப்பு மேலதிக 93 மேலதிக வாக்குகளால் இன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆதரவாக 157 வாக்குகளும், எதிராக 64 வாக்குகளும் அளிக்கப்பட்டன.** 2

## யாழ். எம்.ஜி.ஆர். நினைவாக இன்று பிரார்த்தனை நிகழ்வு



(இ.கலையமுதன்)

தமிழகத்தின் முன்னாள் முதல்வரும் நடிகருமான எம்.ஜி.இராமச்சந்திரனின் தீவிர ரசிகனும் நண்பருமான 'யாழ். எம்.ஜி.ஆர்.' என அழைக்கப்படும் கோப்பாய் சுந்தரலிங்கத்தின் ஆத்மா சாந்தி பிரார்த்தனை நிகழ்வு இன்று கோப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். சர்வமதத் தலைவர்கள் கலந்து 2

## பல்கலை மாணவர்களின் பதிவுக் கால எல்லை நீடிப்பு



பல்கலைக்கழக மாணவர்களைப் பதிவு செய்யும் கால எல்லை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களை பதிவு செய்யும் கால எல்லை இன்றுடன் நிறைவடையும் நிலையில், குறித்த பதிவு செய்யும் காலம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக, பல் 2

## ஐ.நா. உதவி செயலாளர் கன்னி இலங்கை விஜயம்



ஐக்கிய நாடுகள் சபைக்கான உதவி செயலாளர் நாயகம் கன்னி விக்னராஜா ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு எதிர்வரும் 15ஆம் திகதி இலங்கை வரவுள்ளார்.

அவர் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் உதவி நிர்வாகி மற்றும் அதன் ஆசிய - பசுபிக் பிராந்திய பணிப்பாளராகவும் உள்ளார். 2

## 51 எயிட்ஸ் நோயாளர்கள் அம்பாறையில் அடையாளம்



அம்பாறை மாவட்டத்தில் 51 எயிட்ஸ் நோயாளர்கள் காணப்படுகின்றனர். அதன்படி கல்முனை பிராந்தியத்தில் 4 எயிட்ஸ் நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

- இவ்வாறு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜி.சுகுணன் 2

## கொழும்பிலிருந்து யாழ். வந்த பஸ் விபத்து; பெண்ணொருவர் மரணம்; பலர் படுகாயம்!

(இ.கலையமுதன்)

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த சொகுசு பஸ், அநுராதபுரம் பகுதியில் விபத்துக் குள்ளாகியதில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளமையுடன் பலர் படுகாயமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த தனியாருக்குச் சொந்தமான குறித்த சொகுசு பஸ், அநுராத 2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## விறகு தேடிக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மெனிக்கா என்ற மூதாட்டியே இவ்வாறு காணாமல்போயுள்ளார்.

அவர் கடந்த 6ஆம் திகதி காலை 9.30 மணியளவில் வீட்டுக்கு அருகில் உள்ள காட்டுப்பகுதிக்கு விறகு சேகரிக்கச் சென்றுள்ளார். அவர் இதுவரை வீடு திரும்பாத நிலையில் அவரின் புதல்வர்களும் பிரதேச மக்களும் தேடி வருகின்றனர்.

இது தொடர்பில் அருகில் உள்ள தெரிபே பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸாரும் இணைந்து தேடுதலை முன்னெடுத்த போதிலும் மூதாட்டியைக் கண்டுபிடிக்க முடியாமல் போயுள்ளது.

எனினும், கடந்த 8 ஆம் திகதி முன்னெடுத்த தேடுதலில் குறித்த மூதாட்டி விறகு வெட்டுவதற்காக எடுத்துச் சென்ற கத்தியைக் கண்டுபிடித்தனர்.

அதனைத் தொடர்ந்து பின்னர், அருகில் உள்ள காட்டில் தேடியபோது, உடைந்த மரக் குற்றியில் குறித்த மூதாட்டி அணிந்திருந்த உடையும், விறகு தூக்கும்போது தலையில் வைத்துக் கொள்ள எடுத்துச் சென்ற சேலையும் கண்டெக்கப்பட்டுள்ளது. எனினும், மூதாட்டியைக் கண்டுபிடிக்க முடியாமல் போயுள்ளது.

இதனால் மோப்ப நாய்களைப் பயன்படுத்தி மூதாட்டியைக் கண்டுபிடிக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.

எனினும், இதுவரை காணாமல் போன டிங்கிரி மெனிக்கா தொடர்பில் எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## காணாமல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை 10 மணியளவில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

'வலிந்து காணாமல்போனோருக்கு மரணச் சான்றிதழ் வேண்டாம், இழப்பீடு வேண்டாம், காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் வேண்டாம், சர்வதேசமே நீதியைத் தா' போன்ற பல்வேறு கோஷங்கள் இதன்போது எழுப்பப்பட்டன.

இதன்போது போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது, அண்மையில் பாகிஸ்தானுக்கு 30 ஆயிரம் கண்கள் தானம் செய்யப்பட்டமை குறித்து வெளியான தகவல் தொடர்பிலும், வடபகுதி கரையோரங்களில் மிதக்கும் சடலங்கள் பற்றியும் கேள்வி எழுப்பினர்.

போராட்டத்துக்கு ஆதரவளிக்கும் வகையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் இதன்போது பங்கேற்றார்.

போராட்ட நிறைவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் அலுவலகத்துக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

போராட்டம் நடைபெற்ற பகுதியில் பொலிஸாரும் புலனாய்வுப் பிரிவினரும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

## பஸில் வந்ததால் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அஜித் நிவாட் கப்ரால் மத்திய வங்கி ஆளுநராக வந்தால் நிதி நெருக்கடி தீரும் என்றார்கள். ஆனால், இன்று என்ன நடக்கின்றது?

பால் மா இறக்குமதியைக்கூட ஒரு வருடம் நிறுத்த வேண்டிவரும் என நிதி அமைச்சர் குறிப்பிடுகின்றார்.

அந்தளவுக்கு நிதி நெருக்கடி உச்சம் பெற்றுள்ளது. எனவே, பொறுப்பான முறையில் பொருளாதாரத்தை முகாமை செய்ய வேண்டும் - என்றார்.

## அரசின் பலம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றம் இன்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. ஆரம்பக்கட்ட சபை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர், வரவு - செலவுத் திட்டத்தின் 3ஆம் வாசிப்பு மீதான விவாதம் ஆரம்பமானது.

ஆளும் மற்றும் எதிரணி உறுப்பினர்கள் கருத்துக்களை முன்வைத்த பின்னர், நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ பதிலளித்து உரையாற்றினார். மாலை 6.08 மணிக்கு வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதன்போது ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி மற்றும் அரசுக்கு ஆதரவு வழங்கும் பங்காளிக் கட்சிகள் பாதீட்டின் 3ஆம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பின்போது அதனை ஆதரித்து வாக்களித்தன.

ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன எதிராக வாக்களித்தன.

வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியன தீர்மானம் எடுத்திருந்தாலும், கட்சிகளின் முடிவுக்கு மாறாகவே அக்கட்சிகளின் எம்.பிக்கள் வாக்களித்தனர். கட்சித் தலைவர்களான ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன் ஆகியோர் பாதீட்டை எதிர்த்து வாக்களித்தனர்.

அதேவேளை, மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணியின் 5 எம்.பிக்களும் பாதீட்டை எதிர்த்து வாக்களித்தனர்.

அரச பங்காளிக் கட்சிகள், அரசின் செயற்பாடுகளைக் கடுமையாக விமர்சித்து வந்தன. இதனால் பாதீட்டின்போது மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தை அரசு இழக்கும் எனக் கூறப்பட்டது. ஆனாலும், மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற்று பாதீட்டை நிறைவேற்றியுள்ளார் நிதி அமைச்சர் பஸில்.

## யாழ். எம்.ஜி.ஆர். ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு கோப்பாய் சுந்தரலிங்கத்தின் ஆத்மா சாந்தி வேண்டி பிரார்த்தனை நடத்தினர்.

இதில் குடும்ப உறுப்பினர்கள், அயலவர்கள் மற்றும் அவரது நண்பர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

யாழ். கல்வியங்காடு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள எம்.ஜி.ஆர். சிலை, யாழ் எம்.ஜி.ஆர். கோப்பாய் சுந்தரலிங்கத்தின் சொந்த நிதியில் அமைக்கப்பட்டுள்ளதுடன் ஆண்டுதோறும் எம்.ஜி.ஆர். நினைவு தினங்களை அனுஷ்டித்து வந்ததுடன் அத்தினங்களில் வறிய மக்களுக்குத் தன்னாலான உதவிகளையும் யாழ். எம்.ஜி.ஆர். செய்து வந்துள்ளார்.

யாழ். எம்.ஜி.ஆர். என அழைக்கப்படும் கோப்பாய் சுந்தரலிங்கம் கடந்த மாதம் 11ஆம் திகதி நோய்வாய்பட்ட நிலையில் இயற்கை எய்தியமை குறிப்பிடத்தக்கது.

## பல்கலை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலைக்கழக மாணவர்களை பதிவு செய்யும் கால எல்லை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது எனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

## ஐ.நா. உதவி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் முடிவடைந்த உலக காலநிலை மாநாட்டின் முடிவுகள் மற்றும் பிராந்தியத்தினுள் கொரோனாத் தொற்றுக்குப் பிந்திய பொருளாதார மீட்சி என்பவற்றை ஆராய்வதே உதவி செயலாளர் நாயகத்தின் இலங்கை விஜயத்தின் நோக்கமாகும்.

இதன்போது அவர் விசேடமாக மனிதவள அபிவிருத்தித்துறையின் வெற்றிக்காக, நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதை விரைவுபடுத்துவதில் அவர் கவனம் செலுத்துவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 51 எயிட்ஸ் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் இன்று மாலை நடத்திய விசேட செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய நாடுகள் சபையால் டிசெம்பர் முதலாம் திகதி உலக எயிட்ஸ் தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றது. 1981ஆம் ஆண்டு முதலாவது எயிட்ஸ் நோயாளி இனங்காணப்பட்டமையைத் தொடர்ந்து இன்று வரை 3.6 கோடி மக்கள் இந்த எயிட்ஸ் நோயால் இறந்துள்ளனர். 3.7 கோடி மக்கள் இன்று வரை எயிட்ஸ் நோயுடன் வாழ்ந்து வருகின்றனர்.

இலங்கையைப் பொறுத்தமட்டில் 2 ஆயிரத்து 600 பேர் சிகிச்சையை எயிட்ஸ் நோய்க்காகப் பெற்றுக்கொண்டிருக்கின்றார்கள். இன்றும் இலங்கையில் ஆயிரம் எயிட்ஸ் நோயாளிகள் எம்மிடையே மறைந்து வாழ்கின்றனர்.

தற்போது அம்பாறை மாவட்டத்தில் 51 எயிட்ஸ் நோயாளர்கள் காணப்படுகின்றனர். கல்முனை பிராந்தியத்தில் 4 எயிட்ஸ் நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

எயிட்ஸ் நோயானது ஒருவரின் நிர்ப்பீடணசக்தியை இல்லாதொழிக்கின்றது. இந்த நோயானது 3 முறைகளில் பிரதானமாகப் பரவல் அடைகின்றது. அதாவது பாதுகாப்பற்ற பாலியல் செயற்பாடு, பாதுகாப்பற்ற ஊசிகள் மற்றும் இரத்தமாதிரிகளின் ஊடாகவும் பரவுகின்றன.

இலங்கையைப் பொறுத்தமட்டில் பாதுகாப்பற்ற முறையில் ஆண் - ஆணுடன் பாலியல் செயற்பாட்டில் ஈடுபடுவதால் 40 வீதத்துக்கு அதிகமாக எயிட்ஸ் அதிகரித்துச் செல்கின்றமை சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகும் - என்றார்.

## கொழும்பிலிருந்து .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புரம் ரம்பாவ பகுதியில் இன்று அதிகாலை 2.30 மணியளவில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

சம்பவம் தொடர்பில் ரம்பாவ பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.


விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி
இலக்கம்-
076 443 8622





# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மனித உரிமைகள் தினம்

இன்று சர்வதேச மனித உரிமைகள் தினம். உலகில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் இனம், நிறம், பாலினம், மொழி, அரசியல், நாடு, சமுதாயத் தோன்றல், சொத்து, பிறப்பு அல்லது சமூக உயர்வு போன்ற எதுவித வேறுபாடுகளுமின்றி ஒரே போன்று வாழ்வதற்கான அடிப்படை உரிமைகளைக் கொண்டவன் என்று மதிக்கப்படவேண்டும். அதை வலியுறுத்தும் விதத்தில் அமைந்ததுதான் இன்றைய தினம்.

டிசெம்பர் 10 ஆம் திகதியை மனித உரிமைகள் தினமாகக் கொண்டாடும் முடிவு 1948ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையால் பிரகடனப்படுத்தப்பட்டது.

ஒவ்வொரு தனிமனிதனும் தான் வாழ்வதற்கான உரிமையைப் பெறும் அதேசமயம், மற்ற மனிதர்களும் அதே உரிமைகளுடன் வாழ்வதற்கான உரிமையை வழங்கும் பொறுப்பும் கடப்பாடும் அவனுக்கு இருப்பதை உணர்த்துவதே இந்தச் சிந்தனைப் போக்கின் அடிப்படையாகும்.

அனைத்து மனிதர்களும் சுதந்திரமானவர்கள் என்பதையும் உரிமையிலும், கண்ணியத்திலும், சட்ட அளவுகோலிலும் சமமானவர்கள் என்பதையும் சர்வதேச மனித உரிமைகள் தினப் பிரகடனம் வலியுறுத்துகின்றது.

அது மாத்திரமல்ல, 1948 ஆம் ஆண்டு டிசெம்பர் 10 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட இந்த மனித உரிமைகள் சர்வதேச சாசனம் ஐந்நூறு மொழிகளில் கிடைக்கின்றது. உலகில் அதிக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட ஆவணம் இதுதான். ஆனால், உலகில் அதிகளவில் செயலில் மீறப்படும் ஆவணமாகவும் இதுதான் இருக்க முடியும். இருக்கின்றது என்பதுதான் வேதனையான உண்மை.

இந்த வருடத்துக்கான மனித உரிமைகள் தின மகுட வாசகம் "சமத்துவம், சமத்துவமின்மையை இல்லா தாக்குதல், மனித உரிமையை முன்னேற்றுதல்" என்பதாம்.

அடிப்டை மனித உரிமைகள் குறித்து அதிகம் பேசப்பட்டாலும் உலக அளவில் மனித உரிமை மீறல்கள் தாராளமாகவும் எல்லை கடந்தும் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன என்பதுதான் களயதார்த்தம்.

அதுவும் தத்தமது நாடுகளில் மனித உரிமைகளைப் பேணவேண்டிய –நிலைநாட்ட வேண்டிய அரசுகளும், அவற்றின் கட்டமைப்பு இயந்திரங்களும்தான் மனித உரிமை சாசனங்களுக்கும், பட்டாயங்களுக்கும் முரணான, மோசமான மீறல்களில் ஈடுபடுகின்றன.

இதுதான் இலங்கையின் நிலைமையும் கூட.

மனித உரிமை மீறல்களுக்காகவும், யுத்த குற்றங்களுக்காகவும், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்களுக்காகவும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் சர்வதேசம் நிறைவேற்றிய தீர்மானத்தின் அடிப்படையில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள இலங்கை, அது தொடர்பில் நியாயம் செய்து, நீதியை நிலைநாட்டி, பொறுப்புக் கூறலை நடைமுறைப்படுத்த மறுத்து நிற்பதன் மூலம் தொடர்ந்தும் மனித உரிமை மீறல்களை இழைத்து வருகின்றது.

மனித உரிமை மீறல் என்பது, அது இழைக்கப்பட்ட சமயத்தில் ஒரு குற்றம் என்பது மட்டுமல்லாமல், அதற்கு நீதி செய்ய மறுக்கப்படும் போது, அது மறுக்கப்படும் காலம் முழுவதும் தொடர் மீறல்களாகவே கருதப்படுகின்றது, கருதப்படும்.

ஒரு புறம், யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் இழைக்கப்பட்ட மோசமான குற்றங்களுக்கு நீதி செய்ய மறுப்பதன் மூலம் தொடர்ந்து அக்குற்றத்தை மேற்கொண்டு வரும் கொழும்பு ஆட்சிப் பீடம், தொடர்ந்து, புதிது புதிதாகவும் மனித உரிமை மீறல் குற்றங்களை சதா புரிந்து கொண்டும் வருகின்றது.

மனித உரிமை மீறல்களை இழைத்தவர்கள், இழைக்கின்றவர்கள் சர்வதேச சட்டங்களுக்கு முன்னர் எந்தத் தடை, கட்டுப்பாடு, பாதுகாப்பு முன்னுரிமையுமின்றி கட்டாயம் நிறுத்தப்படுவார்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டால்தான் இவ்விடயத்தில் நீதி பிழைக்கும்.

# ஹிஸ்புல்லாஹ்வை பிணையில் விடுவிக்க விண்ணப்பம் ஆட்சேபனைகள் தாக்கல் செய்யும் சட்டமா அதிபர்

தடுத்து வைக்கப்பட்டுள்ள சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ்வை பிணையில் விடுவிக்கக் கோரி முன்வைத்துள்ள மறுசீரமைப்பு விண்ணப்பத்திற்கு எதிராக ஆட்சேபனைகள் தாக்கல் செய்யப்படும் என சட்டமா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றில் தெரிவித்தார்.

குறித்த மனு மேனகா விஜேசுந்தர மற்றும் நீல் இத்தவெல ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு முன்னிலையில் விசாரணைக்கு நேற்று (வியாழக்கிழமை) காலை எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, ஹிஸ்புல்லாவின் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் விதிகளின் கீழ் புத்தளம் மேல் நீதிமன்றில் சட்டமா அதிபர், தமது கட்சிக்காரருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளமையை சுட்டிக்காட்டினார்.

எனினும் பயங்கரவாத தடைச் சட்டத்தின்படி குற்றம் சாட்டப்பட்டவரை பிணையில் விடுவிக்க தமக்கு அதிகாரம் இல்லை என்று புத்தளம் நீதிமன்ற நீதிபதி தெரிவித்துள்ளார் என ரொமேஸ் டி சில்வா குறிப்பிட்டார்.

இந்தநிலையில் தமது கட்சிக்காரருக்கு பிணை வழங்குவதற்கான உத்தரவை பிறப்பிக்குமாறு ஜனாதிபதி சட்டத்தரணி மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்தார்.

இதன்போது இந்த மனு தொடர்பில் தாம், ஆட்சேபனைகளை முன்வைக்கவுள்ளோம் எனசட்டமாஅதிபரின்சார்பில்தெரிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து எதிர்வரும் 13ஆம் திகதிக்கு முன்னர் குறித்த ஆட்சேபனைகளை தாக்கல் செய்யுமாறு சட்டமா அதிபருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டதுடன், மனுவின் விசாரணையை எதிர்வரும் ஜனவரி 18 ஆம் திகதி வரை மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒத்திவைத்தமை குறிப்பிடத்தக்கது.

# நீதிமன்றை மதிக்காத ஒழுங்கீன நடத்தை உள்ளவரே ஒரே நாடு – ஒரே சட்ட ஜனாதிபதி செயலணியின் தலைவர்

## அவரின் நடவடிக்கைக்கு மகிழ்சியடைய முடியாதென்கிறார் தலதா அத்துகோரள



ஒரே நாடு - ஒரே சட்டத்தை உருவாக்குவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி செயலணியின் தலைவர் யார் என்பதை முன்னாள் நீதி அமைச்சர் தலதா அத்துகோரள நாடாளுமன்றில் வெளிப்படுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற நீதி அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

குறித்த செயலணியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ஞானசார தேரர் முன்பு நீதிமன்ற அவமதிப்பு மற்றும் ஒழுங்கீன நடத்தை காரணமாக தண்டனை பெற்ற ஒரு துறவியாவார்.

எவ்வாறாயினும், ஒரே நாடு - ஒரே சட்டம் என்ற ஜனாதிபதி செயலணியின் தலைவர் பிக்குவின் நடவடிக்கைகள் குறித்து மகிழ்ச்சியடைய முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நாள்களில் அவர் தொடர்பான சமூக வலைத்தளங்களில் பல்வேறு ஒலிப்பதிவுகள் காணப்படுகின்றன எனவும், கடந்த புதன்கிழமையும் புதிய ஒலிப்பதிவு வந்துள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த சம்பவம் பௌத்த மதத்தை கடைப்பிடிக்கும் பௌத்தர்களுக்கு பெரும் பிரச்சினையாக மாறியுள்ளதென சுட்டிக்காட்டும் அவர், செயலணியின் தலைவருக்கும் பௌத்த பிக்குகளுக்கும் இடையில் பிரச்சினை நிலவுவதாகவும் தெரிவித்தார்.

# பம்பலப்பிட்டியில் திருமண நிகழ்விற்கு சென்ற தமிழரிடம் பட்டப்பகலில் கொள்ளைச் சம்பவம்

பம்பலப்பிட்டி, லோரன்ஸ் மாவத்தை வாகனநிறுத்துமிடத்தில் தமிழ் நபர் ஒருவரிடம் பட்டப்பகலில் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம்ஒன்றுஇடம்பெற்றுள்ளது.

குறித்த நபரின் கையில் கைவிலங்கு போட்டு அவர் பயணித்த மோட்டார் வாகனத்தை கடத்தி, 5 லட்சத்திற்கும் அதிக பெறுமதியான நகை மற்றும் 30 ஆயிரம் ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்டதாக பம்பலப்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திம்பிரிகஸ்யாய பிரதேசத்தைச் சேர்ந்த நபர் திருமண நிகழ்வில் கலந்து கொள்வதற்காக வந்து வாகனத்தை நிறுத்த தயாரான போது பாதுகாப்பு தலைக்கவசம் அணிந்து நபர் ஒருவர் தான் பொலிஸ் அதிகாரி என கூறியுள்ளார்.

அந்த நபரின் கைகளுக்கு பின்பக்கமாக விலங்கு போட்டு வாகனத்தின் பின்பக்க ஆசனத்தில் அமர வைத்துள்ளார். சிறிது தூரம் வாகத்தை ஓட்டிச் சென்று மோதிரம் மற்றும் கைச்சங்கிலியை கொள்ளையடித்துள்ளார்.

பின்னர் வாகனம் நிறுத்தப்பட்ட இடத்துக்கு பாதிக்கப்பட்ட நபரின் மனைவியை வரவழைக்குமாறு அச்சுறுத்தியுள்ளார். அந்த நபர் தமிழ் மொழியில் தனது மனைவியை அழைத்து நிலைமையை புரிய வைத்து சம்பவ இடத்துக்கு வருமாறு அழைத்துள்ளார்.

பொலிஸ் அதிகாரி எனக் கூறி கொள்ளையடித்த நபர், அவரை ஏ.டி.எம். இயந்திரம் ஒன்றுக்கு அருகில் அழைத்து சென்று 30 ஆயிரம் ரூபா பணமும் பெற்றுள்ளார்.

கொள்ளையில் ஈடுபட்ட நபர், திருமண நிகழ்வு இடம்பெறும் மண்டபத்துக்கு அருகில் வரும் போது பொலிஸார் இருக்கின்றமையை அவதானித்து வாகனத்தை அந்த இடத்திலேயே விட்டுவிட்டுதப்பிச்சென்றுள்ளார்.

இந்த நிலையில் சந்தேக நபர் தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் சந்தேகநபர் ஓட்டி வந்த மோட்டார் சைக்கிள் கிரிந்திவெல பிரதேசத்தைச்சேர்ந்ததென பொலிஸார் கண்டுபிடித்துள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சீனாவில் கட்டாய பணி பொருள்களின் இறக்குமதிக்கு அமெரிக்கா தடை



சீனாவில் கட்டாயப் பணி மூலம் தயாரிக்கப்பட்ட பொருட்களை இறக்குமதி செய்ய அமெரிக்கா தடை விதித்துள்ளது.

சீனாவின் ஸின்ஜியான்ங் மாகாணத்தில், சுமார் 10 லட்சம் இஸ்லாமிய உய்கர் மக்கள் முகாம்களில் அடைத்துவைக்கப்பட்டுள்ளனர் எனக் கூறப்படுகிறது. மேலும், அவர்களை அடிமைகளாக பயன்படுத்தி பல்வேறு பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன எனவும் குற்றச்சாட்டுகள் உள்ளன.

இந்நிலையில், அவ்வாறு தயாரிக்கப்படும் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு தடை விதிக்கும் பிரேரணை, அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதில், ஜனாதிபதி ஜோ பைடன் கையெழுத்திட்டதும் உடனடியாக இந்த சட்டம் அமுலுக்கு வரும். மேலும் திபெத்தியர்களை பயன்படுத்தி சீனா தயாரிக்கும் பொருள்களையும், இனி அமெரிக்கா இறக்குமதி செய்யாது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

# 57 நாடுகளில் பரவியுள்ள ஒமிக்ரோன்!




ஒமிக்ரோன் வேகமாகப் பரவி வருவதாகவும், தற்போது அது 57 நாடுகளுக்கு பரவியுள்ளதாகவும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இது மேலும் பல நாடுகளுக்கு பரவக் கூடிய ஆபத்து இருப்பதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

அத்துடன், பல்லாயிரம் பேருக்கு மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நிலை ஏற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், டெல்டா வைரஸின் பாதிப்பை விடவும் குறைவான பாதிப்பே ஒமிக்ரோனால் ஏற்பட்டிருப்பதாகவும் உலக சுகாதார அமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

# ரஷ்ய படையெடுப்பு அச்சம் தொடர்பாக வலுவான நடவடிக்கை எடுக்க அமெ. தயார்



விளாடிமிர் புடினுடனான அதிபர் ஜோ பைடனின் அரிய சந்திப்பிற்குப் பிறகு, உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பு அச்சம் தொடர்பாக 'வலுவான நடவடிக்கை' எடுக்க தயாராகி வருவதாக அமெரிக்கா கூறியுள்ளது.


கடந்த செவ்வாய்க்கிழமை காணொலி அழைப்பு வழியாக நிகழ்ந்த இந்தச் சந்திப்பிற்குப் பிறகு, அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லீவன், வொஷிங்டன் வரும் வாரங்களில் தேவைப்பட்டால் மேற்கொள்ள வலுவான எதிர்வினைக்குத் தயாராகி வருகிறது என பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

மேலும், 2014 இல் செய்யாதவற்றுக்கும்கூட, இப்போது தயாராக உள்ளோம். இந்தப் பிரச்சினையில் அமெரிக்காவின் நிலைப்பாடு என்ன என்பதில் அதிபர் தெளிவாக இருக்கிறார் என்று கூறினார். உக்ரைன் மீது தாக்குதலை முன்னெடுத்தால், அமெரிக்கா எதிர்வினை ஆற்றும் என பைடன் தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த எதிர்வினை பொருளாதார ரீதியாக மட்டுமன்றி மற்ற வகைகளிலும் இருக்கும் என்று தெரிவித்துள்ளார். 90,000-க்கும் அதிகமான ரஷ்ய படைகள் உக்ரைன் எல்லையில் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளன என நம்பப்படுகிறது. ரஷ்யாவோ, உக்ரைனை தாக் கமாட்டோம் என கூறியுள்ளது. பைடன் மற்றும் புடின் கடைசியாக சுவிட்ஸர்லாந்தில் கடந்த ஜூன் மாதம் சந்தித்தனர். ஆனால், பேச்சில் பெரிய முன்னேற்றம் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# உக்ரேன் மீது ரஷ்ய படையெடுத்தால் பொருளாதார நடவடிக்கை விதிக்கப்படும்

## அமெரிக்கா எச்சரிக்கை



உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்தால் அதன்மீது மேற்கத்திய நாடுகள் பொருளாதார ரீதியாகக் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளக் கூடும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் எச்சரித்துள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடன் நடைபெற்ற இரண்டு மணிநேர இணையவழி சந்திப்பின் போதே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டதாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்த கடுமையான நடவடிக்கையின் ஒரு பகுதியாக ரஷ்யாவின் மிகப் பெரிய வங்கி குறிவைக்கப்படலாம் என கூறப்பட்டுள்ளது.

இதற்கு பதிலளித்த ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், நேட்டோபடைகள், கிழக்கு நோக்கிச் செல்வதைத் தவிர்க்கும் உத்தரவாதத்தை வழங்குமாறு பைடனைக் கேட்டுக்கொண்டார்.

அத்துடன், தற்காப்பு ஏவுகணை முறைகள் ரஷ்யாவுக்கு அருகில் உள்ள நாடுகளில் வைக்கப்படமாட்டாது எனும் உத்தரவாதத்தையும் வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

அந்த விவகாரங்கள் குறித்து இருநாட்டுப் பிரதிநிதிகள் மேலும் கலந்தாலோசிக்க இரு தலைவர்களும் ஒப்புக்கொண்டனர் எனவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# வெளிநாட்டு கணக்காளர்கள் பாகிஸ்தான் செல்ல மறுப்பு



பாகிஸ்தானின் சியல்கோட் நகரில் பிரியந்த குமார தியவடன கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டமையையடுத்து, சர்வதேச தரத்திற்கு அமைவாக இயங்கிவரும் அந்நாட்டு தயாரிப்பு நிறுவனங்களில் கணக்காய்வு பணிகளை மேற்கொள்வதற்கு, வெளிநாட்டு கணக்காளர்கள் வருகை தர மறுப்பு தெரிவித்து வருகின்றனர்.


பாகிஸ்தானில் உள்ள சில நிறுவனங்களில் இலங்கையைச் சேர்ந்த கணக்காய்வு நிறுவனங்களைச் சேர்ந்தவர்களே பணியாற்றிவருகின்றனர் என்பதால், இலங்கை கணக்காளர் பிரியந்த கொல்லப்பட்டமையையடுத்து, அவர்கள் பாகிஸ்தானுக்கு செல்ல மறுப்பு தெரிவித்து வருகின்றனர் என பாகிஸ்தான் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இராணுவஹெலிக்கொப்டர்விபத்துதொடர்பாக சுற்றுலாப் பயணிகளிடமும் விசாரிக்க முடிவு






நீலகிரி மாவட்டத்தில் இந்திய விமானப்படையின்ஹெலிக்கொப்டர் வெடித்துச் சிதறி முப்படைத் தலைமைத் தளபதி உள்ளிட்ட 14 பேரின் உயிரைப் பறித்த விபத்து பற்றி வெலிங்டன் பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். இயற்கைக்கு மாறான மரணம் என்ற பிரிவின் கீழ் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. விபத்துப் பற்றி விசாரிக்க, நீலகிரி ஏ.டி.எஸ்.பி. முத்துமாணிக்கத்தை விசாரணை அதிகாரியாக தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது. அவர் இதுவரை 26 சாட்சிகளை விசாரித்துள்ளார்.

இதையடுத்து, நீலகிரி மாவட்ட பொலிஸ்கண்காணிப்பாளர் ஆஷிஷ் ராவத்தும், விசாரணை அதிகாரி முத்துமாணிக்கமும் காட்டேரி வனப்பகுதிக்கு நேரில் சென்று, அங்கு ட்ரோன்களைப் பறக்கவிட்டு அவற்றின் மூலம் காட்டுப்பகுதியில் ஏதேனும் ஆதாரங்கள் கிடைக் கின்றனவா எனதேடிவருகின்றனர்.

காட்டேரி பகுதியில் ஹெலிக் கொப்டர் விபத்து நேரிடுவதற்கான புற சாத்தியக்கூறுகள் குறித்தும் அவர்கள் ஆராய்ந்து வருகின்றனர். விசாரணையில் பங்கேற்பதற்காக நீலகிரி, கோவை மாவட்டங்களின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பொலிஸ் ஆய்வாளர்களும் காட் டேரிக்கு சென்றுள்ளனர். விசார ணையின் ஓர் அங்கமாக, விபத்து நடந்த நாளில் அப்பகுதிக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளிடமும் தகவல்களைச் சேகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

# கைதான யூடியூபர் மாரிதாஸுக்கு வரும் 23 வரை சிறைக்காவல்



இந்திய முப்படைகளின் தலைமைத் தளபதியின் ஹெலிக்கொப்டர் விபத்திற் குள்ளான சம்பவத்தைப் பின்னணியாகக் கொண்டு, தமிழகத்தை காஷ்மீருடன் இணைத்து சமூக வலைதளங்களில் சர்ச்சைக்குரிய கருத்தை பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் பதி விட்டார் எனத் தெரிவித்து பா.ஜ.க. ஆதரவு யூடியூபர் மாரிதாஸ் மீது பொது அமைதிக்கு பாதிப்பு ஏற்படுத்திய காரணத்திற்காக நடவடிக்கை எடுக்கக்கோரி மதுரை மாநகர தி.மு.க. தகவல் தொழில்நுட்பப்பிரிவைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் என்பவர் சைபர்கி ரைம் பொலிஸாரிடம் புகார் அளித்திருந் தார்.

அந்தப் புகாரின் கீழ் மாநிலத்தின் பொது அமைதியை சீர்குலைத்தல் தொடர் பான நான்கு பிரிவுகளின் கீழ் சைபர் கிரைம் பொலிஸார் மாரிதாஸ் மீது வழக்குப்பதிவு செய்து பின்னர் கைது செய்தனர்.

நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல் வதற்கு முன்னர் அவருக்கு கொரோனா மற்றும் மருத்துவ பரிசோதனை செய்ய, அவரை பொலிஸார் பாதுகாப்புடன் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல முயன்றனர். அப்போது புதூர் பொலிஸ் நிலையம் முன்பாக பொலிஸார் வாக னத்தை முற்றுகையிட்டு பா.ஜ.கவினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், பொலிஸாருக்கும் பா.ஜ.கவினருக்கும் இடையே கடுமையான தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

பின்னர், மாரிதாஸை மதுரை மாவட்ட நான்காவது குற்றவியல் நடுவர் நீதிமன்ற நீதி பதி வீட்டில் பொலிஸார் ஆஜர்படுத்தினர். அங்கு இது தொடர்பாக விசாரித்த நீதிபதி சுந்தர காமேஸ்வர மார்த்தாண்டம், யூடியூபர் மாரிதாஸை வருகின்ற 23 ஆம் திகதி வரை நீதிமன்றக் காவலில் சிறையில் வைக்க உத்தரவிட்டார்.

இதனைத் தொடர்ந்து பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் மாரிதாஸ் பொலிஸ் வாகனத்தில் தேனி மாவட்டம் உத்தம பாளையம் கிளைச் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

# தம்பி மாரிதாஸ் கைதை கடுமையாக எதிர்க்கிறேன்

## கருத்துச் சுதந்திரத்தைச் சிதைப்பதாக சீமான் பேட்டி



இந்திய முப்படைகளின் தலை மைத்தளபதியின் ஹெலிக்கொப்டர் விபத்திற்கு தமிழகத்தை காஷ் மீருடன் இணைத்து சமூக வலை தளங்களில் சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்டார் என பா.ஜ.க. ஆதரவு யூடியூபர் மாரிதாஸ் கைது செய்யப்பட்டிருக்கிறார். அவரது, கைது குறித்து நாம் தமிழர் கட்சி யின் தலைமை ஒருங்கிணைப் பாளர் சீமான் தனது கண்டனத்தை ஊடகமொன்றுக்கான பேட்டியில் வெளியிட்டுள்ளார்.

மாரிதாஸின் கருத்து கோட்பாடு களில் முழுமையாக முரண்படு கிறேன். ஆனால், தம்பி மாரிதாஸின் கைதை நான் கடுமையாக எதிர்க் கிறேன். ஒரு ஜனநாயக நாட்டில் எதையுமே பேசக்கூடாது என்று மாரிதாஸ் சார்ந்திருக்கும் பா.ஜ.க. சொல்வதையும் ஏற்க முடியாது. தி.மு.க. எடுக்கும் முடிவையும் ஆத ரிக்க முடியாது. கருத்து சுதந்திரத் திற்கு எதிராக கைது செய்தால் நாங் கள் என்னதான் பேசுவது?

இதேபோலத்தான், தம்பி சாட்டை துரைமுருகனையும் வேண்டு மென்றேகைதுசெய்தார்கள். என்னிடம் உங்கள் கூடவே இருப்பதால் கைது செய்ய முடியவில்லை. எங்களுக்கு நெருக்கடி, என்றார்கள் பொலிஸ். நானே அனுப்புகிறேன், என்று அவரை சரணடைய வைத்தேன். ஆனால், இந்த அரசு எவ்வளவு வன்மமாக இருக்கிறது என்பது அவரை நான் பிணையில் எடுக்க போராடும்போதுதான் தெரிந்தது. மாரிதாஸுக்கும் அப்படித்தான் இருக்கும் என்று நினைக்கிறேன்.

மாரிதாஸ் ஏற்றுக்கொண்ட கொள்கைக்கு உண்மையாக இருக் கிறார். அவ்வளவுதான். அவர் என் னையும்தான் மிகவும் விமர்சித்தி ருக்கிறார். நான் ஒன்றுமே சொல் லவில்லையே? நான் எனது அம்மா, அப்பாவிடம் அன்பாக இருப்பதில் நீங்கள் எப்படி குறை சொல்லமுடி யும்? அதுபோல்தான், மாரிதாஸ் ஏற்றுக்கொண்ட கொள்கைக்கு விசுவாசமாக இருக்கிறார். அதற்காக, அவரைக் கைது செய்வது தவறு.

எங்களின் தமிழ்த் தேசிய அரசி யலையுமே விமர்சிக்க ஆள் இருக் கிறார்கள். ஆனால், அதற்கு காரணம் சீமான் பின்னால் இவ்வளவு பேர் திரள்கிறார்களே, என்ற வெறுப்புத் தான். நாங்கள் கருத்துச்சுதந்திரத்தை மதிக்கிறோம், என்று சொல்கிறார் முதல்வர் ஸ்டாலின். உண்மை யிலேயே, கருத்து சுதந்திரத்தை மதிக் கிறவர்களாக இருந்தால், என் பேட்டியை எடுத்து அவர்களுடைய தொலைக்காட்சியில் போடுவார் களா? அரசு என்பது அடிப்படை உரிமைகளைக் காப்பதற்காகத்தான் இருக்கவேண்டும், என்று தனது பேட்டியில் சீமான் குறிப்பிட்டிருக் கிறார்.

# வெளிநாடுகளுக்கான விமானப் போக்குவரத்து தற்போதைய தடை ஜனவரி 31 வரை நீடிப்பு




கொவிட்- 19 தடுப்பு நடவடிக்கையாக பயணக்கட்டுப்பாடுகள் மற்றும் விசா தொடர்பான கட்டுப்பாடுகள் நீடிக்கப்படுவது தொடர்பாக, இந்திய விமானப் போக்குவரத்து இயக்குநரகத்தின் அறிவிப்பொன்று வெளியாகியுள்ளது.

அதன்படி, இந்தியாவிலிருந்து வெளி நாட்டுக்கு பயணிக்கும் மற்றும் வெளி நாட்டிலிருந்து இந்தியாவுக்கு வரும் சர்வதேச பயணிகளுக்கான விமான சேவைகள் 2022 ஜனவரி இறுதி வரை ரத்துச் செய் யப்படுகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக, இந்த விமான சேவை ரத்து இம்மாதம் 15 ஆம் திகதி வரை இருந்த நிலையில், தற்போது கொரோனாத் தடுப்புக்காக அது 2022 ஜனவரி 31 ஆம் தி கதிவரை நீடிக்கப் பட்டுள்ளது.

தேவைப்பட்டால் சூழ்நிலை கருதி, விசேட பயணங்களுக்கு இந்திய விமானப் போக்குவரத்து இயக்குநரகம் ஒப்புதல் அளிக்கும் என்றும், சில சர்வதேச விமா னங்களுக்கு இந்தக் கட்டுப்பாடுகளில் தளர் வுகள் ஏற்படுத்தப்படும் என்றும் தெரி விக்கப்பட்டுள்ளது. இதுகுறித்த அறிவிப்பை இந்திய விமான போக்குவரத்து இயக்குநர் ஜெனரல் நீரஜ் குமார் அறிவித்துள்ளார்.

# மேற்கு வங்கம் மற்றும் அசாம் மாநிலங்களில் பாதுகாப்பு படையினர் 15 கி.மீ. வரை சோதனை செய்யலாம்

*மேற்கு வங்கம் மற்றும் அசாம் மாநிலங்களில், சர்வதேச எல்லையில் இருந்து பாதுகாப்பு படையினரால் சோதனை செய்யப்படக்கூடிய அதிகாரம் 50 கிலோ மீற்றராக நீடித்து, இந்திய மத்திய உள்துறை அமைச்சகம் அண்மையில் உத்தரவிட்டது. அதற்கு மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜி எதிர்ப்புத் தெரிவித்திருந்தார்.*

*இந்த நிலையில், மாநில பொலிஸ் டி.ஜி.பிக்கு மம்தா பானர்ஜி பிறப்பித்த உத்தரவில், இந்திய -வங்க தேச எல் லைப் பகுதியான கரீம்பூர் மாவட்டத்தில் எல்லைப் பாதுகாப்புப் படையினர் 15 கிலோமீற்றர் தொலைவுவரை உள்ள அதிகார எல்லைக்குள் மட்டும் அவர்கள் கடமையைச் செய்யட்டும் என்றும் அந்த எல்லையை மீறிடாமல் தடுத்திட வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.*

# மட்டக்களப்பு மாநகரசபை வரவு – செலவுத் திட்டம் இருபத்து மூன்று வாக்குகளால் நிறைவேற்றம்

மட்டக்களப்பு மாநகரசபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் இன்று வெள்ளிக்கிழமை 23 வாக்குகளால் வெற்றி பெற்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

மாநகரசபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்திற்கான சபை அமர்வு இன்று மாநகரசபை மண்டபத்தில் சபை முதல்வர் ரி. சரவணபவான் தலைமையில் இடம்பெற்றபோது 36 மாநகரசபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்

இதன் போது வரவு – செலவுத் திட்டத்தை சபை முதல்வர் ரி.சரவணபவான் முன்வைத்து வாக்கெடுப்பு இடம்பெற்றது இதில் வரவு– செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக 22 வாக்குகளும் எதிராக 13 வாக்குகளும், நடுநிலையாக ஒரு வாக்கும் ஒருவர் சபை அமர்வில் சமுகமளிக்காத நிலையில் 22 வாக்களால் வரவு – செலவுத் திட்டத்திற்கு ஆதரவு கிடைத்ததையடுத்து வரவு – செலவுத் திட்டம் வெற்றி பெற்று நிறைவேற்றப்பட்டது.



## கிண்ணியா நகர சபைத் தலைவருக்கு இன்று வரை விளக்கமறியல் நீடிப்பு

கிண்ணியா குறிஞ்சாக்கேணி படகுப் பாலம் கவிழ்ந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட கிண்ணியா நகர சபைத் தலைவர் எஸ்.எச்.எம். நளீமுக்கு இன்று வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.திருகோணமலை நீதிமன்ற நீதிவான் பயாஸ் ரசாக் முன்னிலையில் நேற்று முன்தினம் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது நீதிவான் இவ்வுத்தரவை வழங்கினார்.

தனது கட்சிக்காரர் சுகவீனம் காரணமாக சிகிச்சை பெற்று வருகிறார் எனவும் இதனைக் கருத்தில்கொண்டுஅவருக்கு பிணை வழங்குமாறும், கிண்ணியா நகர சபைத் தலைவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றில் கோரிக்கை விடுத்திருந்தார்.

ஆயினும் இது தொடர்பான வழக்கை இன்று வரை ஒத்திவைத்த நீதிவான் சந்தேகநபரின் விளக்கமறியலை இன்று வரை நீடிப்பதாக உத்தரவிட்டார்.

குறித்த அனர்த்தம் தொடர்பில் படகின் உரிமையாளர் மற்றும் அதனை இயக்கிய இருவர் ஆகிய மூன்று சந்தேகநபர்களுக்கும் எதிர் வரும் டிசெம்பர் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலை நீடிக்கும் உத்தரவு நேற்றுமுன்தின் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு போதிய வசதி வாய்ப்புக்கள் இல்லை




மட்டக்களப்பில் யானைகளுக்கும் மனிதர்களுக்கு இடையில் ஏற்படுகின்ற மோதலைத் தடுப்பதற்கு வனஜீவராசிகள் திணைக்களத்துக்குப் போதிய வசதி வாய்ப்புகள் இல்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வனஜீவராசிகள் திணைக்களம் தொடர்பான உரையின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

மனிதர்களுக்கும் யானைக்கும் இடைப்பட்ட மோதல்களைப் பற்றி எமது இராஜாங்க அமைச்சர் விளக்கவுரையாற்றினார். யானைகளும் பாதுகாக்கப்பட வேண்டும். அதே நேரத்தில் மனித உயிர்களும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது நாங்கள் வலியுறுத்தி கூறுகின்ற விடயம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த பத்து ஆண்டுகளின் 117 மனித உயிர்கள் யானைகளால் காவு கொள்ளப்பட்டிருக்கின்றன. அதே நேரத்தில் இந்த பத்து வருடத்தில் 135 யானைகளும் கொல்லப்பட்டிருக்கின்றன. மனிதர்கள் தங்களது வாழ்வாதாரத்தையும், உயிர்களையும், தங்கள் சொத்துக்களையும், உழைப்புகளையும் பாதுகாப்பதற்கு யானை வேலிகளிலே ஏற்படுத்தப்பட்டிருக்கும் மின்சாரத் தாக்கத்தினாலும் இந்த யானைகள் பலியாக்கப்பட்டிருக்கின்றன.

மட்டக்களப்பில் யானைகளுக்கும் மனிதர்களுக்கு இடையில் ஏற்படுகின்ற மோதலை சிறப்பகத் தடுப்பதற்கு வனஜீவராசிகள் திணைக்களத்திற்குப் போதிய வசதி வாய்ப்புகள் இல்லை. கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் பிரதேசத்துக்கு இரண்டு வன ஜீவராசிகள் அலுவலகங்கள் இருந்தாலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒட்டுமொத்தமாக மூன்றே மூன்று அலுவலகங்களும் பதினைந்து உத்தியோகத்தர்களுமே இருக்கின்றார்கள். அதிலும், ஒரே ஒரு பிராந்திய அலுவலகமும், இரண்டு உப அலுவலகங்களுமே இருக்கின்றன.

கடந்த காலங்களில் நடைபெற்ற அந்த உயிரிழப்புகளைக் கருத்திற்கொண்டு மேலும் மூன்று புதிய அலுவலகங்களாவது மட்டக்களப்பில் அமைக்கப்படல் வேண்டும். வெல்லாவெளியில் இருக்கும் அலுவலகம் தரமுயர்த்தப்படல் வேண்டும் என்பதற்கு மேலாக ஒரேயொரு பழுதடைந்த வாகனத்துடன் பதினைந்து உத்தியோகத்தர்கள் எவ்வாறு யானைகளிடமிருந்து மனிதர்களையும், மனிதர்களிடமிருந்து யானைகளையும் காப்பாற்றுவார்கள் என்பதை உணர்ந்து கொண்டு மட்டக்களப்பு மாவட்டத்தைப் பாதுகாக்க வேண்டும்.

மட்டக்களப்பிலே 176 கிலோமீற்றருடைய பதினாறு யானை வேலிகள் இருக்கின்றன. எதிர் காலத்தில் 107 கிலோமீற்றர் வேலிகள் அமைக்க இருக்கின்றன என அறிகின்றோம். அதனைச் சற்று அதிகரித்து வேலிகள் அமைப்பது மாத்திரமல்லாமல் யானைகள் அந்த வேலிகளை உதைத்துவிட்டு வருகின்றன. எனவே, அதற்கேற்றால் போல் அந்த வேலிக்கட்டைகளில் கம்பி சுற்றுவதும், வேலிகளுக்குக் கொடுக்கப்படும் மின்சாரத்தின் அளவை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன், வன திணைக்களத்தினர் பண்ணையாளர்களை மிகவும் துன்புறுத்துகின்றார்கள். அவர்கள் தங்கள் பண்ணைகளுக்குச் செல்லும் போது பண்ணையாளர்களைக் கைது செய்து தண்டம் அறவிடுகின்றமையையும் நிறுத்த வேண்டும்.

அதுமாத்திரமல்லாமல், முல்லைத்தீவில் கூட இருபத்து மூவாயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட காணிகள் நான்கு பிரதேசங்களில் வன திணைக்களத்தால் அபகரிக்கப்பட இருக்கின்றன. அவையை நிறுத்தித் தருவதுடன், தேசிய பூங்காக்களையும். வன ஜீவராசிகள் சரணாலயங்களையும் பிரகடனப் படுத்தியுள்ள எல்லைகளை மீளமைத்தல் என்ற அடிப்படையில் முன்னாள் வனஜீவராசிகள் அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரோராவால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரிப்புக்கு அமைச்சரவை அங்கீகாரத்தை வழங்கியிருந்தது. காயான்கேணி சமுத்திர இயற்கை ஒதுக்கம் பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதனையும் பிரகடனப்படுத்தல் வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன். – என்று தெரிவித்தார்.

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்



சர்வதேச மனித உரிமை தினத்தையிட்டு வடக்கு கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நீதி கோரி மட்டக்களப்பு காந்தி பூங்காவிற்கு முன்னால் இன்று வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில் காலை 10.30 மணிக்கு ஆரம்பித்த இந்த ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், பா.அரியேந்திரன், ஒய்வு பெற்ற மட்டு அரசாங்க அதிபர் மா. உதயகுமார், மாநகரசபை உறுப்பினர்கள் மற்றும் காணாமல் போன உறவுகள் உட்பட நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இதன்போது சர்வதேசமே இலங்கை அரசுக்கு துணை பேகாதே, அச்சுறுத்தாதே அச்சுறுத்தாதே. புலனாய்வாளர்களால் அச்சுறுத்தாதே, இலங்கை அரசே ஒப்படைக்கப்பட்டு சரணடைந்த உறவுகள் எங்கே?, ஐ.நாவே ஒ.எம்.பியை திணிக்க இலங்கை அரசுக்கு துணைபோகாதே, இலங்கை அரசே எமது உறவுகளுக்கும் மதிப்பளி' போன்ற சுலோகங்கள் ஏந்தியவாறு கோஷங்கள் எழுப்பி சுமார் ஒருமணித்தியாலம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் பின் அங்கிருந்து விலகி சென்றனர்.

## தீ பற்றிய பெற்றோல் கடை

திருகோணமலை, தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டி – திருகோணமலை வீதியின் 99ஆம் கட்டை சந்தியில் பெற்றோல் கடையொன்று, நேற்று மதியம் தீப்பற்றிக்கொண்டது.

இதனால் அக்கடை முற்றாக சேதமடைந்துள்ளதுடன், பெண்ணொருவர் எரிகாயங்களுக்கு உள்ளாகியுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு தடயவியல் பொலிஸார் சென்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளமையுடன், சம்பவம் தொடர்



பில் மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு


# சம்பியன்ஸ் லீக்கில் முதல்முறையாக குழுச்சுற்றோடு வெளியேறியது பார்சிலோனா




ஸ்பெயின் நாட்டின் கால்பந்தாட்ட கழக அணியான பார்சிலோனா, சம்பியன்ஸ் லீக் தொடரில் நொக்-அவுட் சுற்றுக்கு முன்னேற முடியாமல் குழு நிலைச் சுற்றுடன் வெளியேறியுள்ளது. 17 ஆண்டுகால சம்பியன்ஸ் லீக் வரலாற்றில் முதல் முறையாக பார்சிலோனா இவ்வாறு குழு நிலைச் சுற்றுடன் வெளியேறி யுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஐந்து முறை சம்பியன்ஸ் லீக் பட்டத்தை வென்ற அணி இவ்வாறு வெளியேறியுள்ளது, அந்த அணியின் ஆதரவாளர்களுக்கு அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. 2004 - 05 சீசன் முதலாக பார்சிலோனா அணி தொடர்ச்சியாக 16 அணிகள் இடம்பெறும் நொக்-அவுட் சுற்றிற்குத் தகுதிபெற்று விளையாடிவந்துள்ளது. நடப்பு 2021-22 சீசனில்தான் நொக்-அவுட் வாய்ப்பை அந்த அணி இழந்துள்ளது.

பேயர்ண் மூனிச் அணிக்கு எதிராக நடைபெற்ற போட்டியில் 0 - 3 என்ற கோல் கணக்கில் தோல்வி அடைந்ததன் மூலம் குழுச் சுற்றுடன் பார்சிலோனா வெளியேறியது . நடப்பு தொடரில் 6 போட்டிகளில் விளையாடி ஒரு போட்டியில் வெற்றிதோல்வியின்றிய முடிவையும், 2 வெற்றிகளையும், 3 தோல்விகளையும் பார்சிலோனா சந்தித்துள்ளது. 2004 முதலாக கடந்த பருவகாலம் வரை பார்சிலோனா அணிக்காக விளையாடி வந்த மெஸ்ஸி, நடப்பு தொடரில் பி.எஸ்.ஜி. அணிக்காக விளையாடுகிறார். அவரது இழப்பு பார்சிலோனா அணியைப் பாதித்திருப்பதாக ரசிகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

## ஒருநாள் அணியின் கப்டனாக ரோகித் சர்மா முடிவு தொடர்பாக சௌரவ் கங்குலி விளக்கம்



இந்திய கிரிக்கெட் அணியின் ரி-20 கப்டன் பதவியிலிருந்து விராட் கோலி சமீபத்தில் விலகியமையால், இந்திய ரி-20 அணியின் தலைவராக ரோகித் சர்மா நியமிக்கப்பட்டார். இந்த நிலையில், தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் தொடருக்கும் ரோகித் சர்மாவை கப்டனாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை (பி.சி.சி.ஐ.) நியமித்துள்ளது.

இந்தத் தொடரிலிருந்து இந்திய ஒருநாள் மற்றும் ரி-20 அணிகளின் தலைவராக ரோகித் சர்மா செயற்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ரி-20 அணிக்கு மட்டுமே ரோகித் சர்மா தலைவராகவும் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளுக்கு விராட் கோலி தலைவராக தொடர்வார் என்றும் முதலில் எதிர்பார்க்கப்பட்டிருந்தாலும் இந்த மாற்றம் எதிர்பாராததாக அமைந்திருந்தது.

இது தொடர்பாக, பி.சி.சி.ஐ. தலைவர் சௌரவ் கங்குலி வழங்கிய பேட்டியொன்றில் சில விடயங்களைத் தெளிவுபடுத்தியிருக்கிறார். விராட் கோலியிடம் ரி-20 கப்டன் பொறுப்பிலிருந்து விலகவேண்டாம் என பி.சி.சி.ஐ. கேட்டுக்கொண்டது. ஆனால், அவர் ரி-20 கப்டன் பொறுப்பிலிருந்து விலகினார். இதையடுத்து, இரண்டு வெள்ளைப் பந்துப் போட்டி வடிவங்களுக்கு இரண்டு கப்டன்களை வைத்திருப்பது சரியானதாக இருக்காது என அணித் தேர்வர்கள் கருதினர். எனவே, ஒருநாள் போட்டிகளுக்கும் ரோகித்தை ஒருநாள் தொடரின் கப்டனாக்க முடிவு செய்யப்பட்டது. இந்த முடிவை கோலியும் ஏற்றுக்கொண்டார். ரோகித் சர்மாவின் தலைமைத் திறன்களில் எங்களுக்கு முழு நம்பிக்கை உள்ளது. விராட் கோலி டெஸ்ட் போட்டிகளில் கப்டனாக நீடிப்பார். இந்திய கிரிக்கெட் சிறந்த வீரர்களின் கைகளில் உள்ளதாக நாங்கள் நம்புகிறோம். வெள்ளைப் பந்துப் போட்டிகளுக்கான கப்டனாக விராட் கோலியின் பங்களிப்புக்கு நாங்கள் நன்றி கூறுகிறோம், என்று சௌரவ் கங்குலி தெரிவித்திருக்கிறார்.

## பொதுநலவாய பளுதூக்கல் சம்பியன்ஷிப் தங்கப்பதக்கத்தை வென்றார் ஸ்ரீமாலி





உஸ்பெகிஸ்தானில் நடைபெற்றுவரும் பொதுநலவாய பளுதூக்கல் சம்பியன்ஷிப் போட்டியில் பெண்களுக்கான 45 கிலோகிராம் எடைப் பிரிவில் இலங்கை வீராங்கனை ஸ்ரீமாலி சமரகோன் தங்கப் பதக்கம் வென்றார். ஆண்களுக்கான 61 கிலோகிராம் எடைப் பிரிவில் இலங்கையின் திலங்க பலகசிங்ஹ வெண்கலப் பதக்கத்தைத் தனதாக்கினார்.

உலக பளுதூக்கல் சம்பியன்ஷிப் மற்றும் பொதுநலவாய பளுதூக்கல் ஆகிய தொடர்கள் உஸ்பெகிஸ்தானின் தஸ்கென்ட் நகரில் கடந்த 7ஆம் திகதி ஆரம்பமாகியிருந்தன. இம்முறை போட்டித் தொடரில் இலங்கையிலிருந்து 20 வீரர்கள் பங்கேற்றுள்ளனர்.

போட்டித் தொடரின் இரண்டாவது நாளில் நடைபெற்ற பெண்களுக்கான 45 கிலோ எடைப் பிரிவில் பங்குகொண்ட இலங்கை வீராங்கனை ஸ்ரீமாலி சமரகோன், ஸ்னெட்ச் முறையில் 58 கிலோகிராம் எடையும் க்ளீன் அண்ட் ஜேர்க் முறையில் 78 கிலோகிராம் எடையும் என மொத்தமாக 136 கிலோகிராம் எடையைத் தூக்கி தங்கப்பதக்கம் வென்றார். இதன் மூலம், ஸ்ரீமாலி சமரகோன் அடுத்தாண்டு இங்கிலாந்தின் பேர்மிங்ஹாமில் நடைபெறவுள்ள பொதுநலவாய விளையாட்டு விழாவில் போட்டியிடுவதற்குநேரடித்தகுதியைப்பெற்றுக்கொண்டார்.

ஆண்களுக்கான 61 கிலோகிராம் எடைப்பிரிவில் பங்கேற்ற திலங்க பலகசிங்ஹ, வெண்கலப் பதக்கம் வென்று அசத்தினார். இதில் ஸ்னெட்ச் முறையில் 116 கிலோகிராம் எடையும், க்ளீன் அண்ட் ஜேர்க் முறையில் 145 கிலோகிராம் எடையும் என மொத்தமாக 261 கிலோகிராம் எடையை அவர் தூக்கி இந்த வெற்றியைப் பெற்றுக்கொண்டார்.

## மூன்றாவது நாளில் இங்கிலாந்து கடும் சவால் ஜோ ரூட், மாலன் சிறப்பான துடுப்பாட்டம்

ஆஷ் டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் முதல் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்துள்ளது. தனது இரண்டாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடிவரும் இங்கிலாந்துக் கிரிக்கெட் அணி, இன்றைய ஆட்ட நேர முடிவில் 2 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து, 220 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

அணித்தலைவர் ஜோ ரூட் 86 ஓட்டங்களுடனும் டேவிட் மாலன் 80 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

நேற்று முன்தினம் ஆரம்பமான இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடி 147 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்திருந்தது. அடுத்து தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த ஆஸ்திரேலிய அணி 425 ஓட்டங்களைக் குவித்தது. ட்ராவிஸ் ஹெட் 152 ஓட்டங்களையும் டேவிட் வோர்னர் 94, லபுசேன் 74 ஓட்டங்களையும் சேர்த்தனர். இங்கிலாந்து அணியின் ஒலி ரொபின்சனும் மார்க் வுட்டும் தலா 3 விக்கெட்டுகளையும் கிறிஸ் வோக்ஸ் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 278 ஓட்டங்கள் பின்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய இங்கிலாந்து அணி, 2 விக்கெட்டுக்களை இழந்து 220 ஓட்டங்களைப் பெற்றது. இங்கிலாந்து அணி, ஆஸ்திரேலியாவை விட 58 ஓட்டங்கள் பின்னிலையில் நாளை நான்காவது நாள் ஆட்டத்தைத் தொடரவுள்ளது.





# கிளி. மாவட்ட செயலக இலவச மருத்துவ முகாம்

## கண்டாவளையில் நடந்தது

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன், வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும், கிளிநொச்சி மாவட்டசெயலகமும் இணைந்து ஏற்பாடு செய்த இலவச மருத்துவ முகாம் நேற்று (வியாழக்கிழமை) கண்டாவளையில் இடம்பெற்றது.

இந்த மருத்துவ முகாம் தர்மபுரம் பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது.

வடமாகாண ஆளுநரின் ஆலோசனைக்கு அமைவாக மத வழிபாட்டுத் தலங்களில் கடமைபுரியும் மதகுருமார்கள் மற்றும் ஊழியர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நடமாடும் சேவையில் பொது மக்களும் கலந்துகொண்டு கண்டாவளை சுகாதார சேவைகள் பணிமனையினரிடம் சிகிச்சைகளையும், மருத்துவ ஆலோசனையையும் பெற்றனர்.

# பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிக்கும் வேலைத்திட்டம் நிறைவு

## கண்டாவளையில் நடந்தது

பெண்களுக்கெதிரான வன்முறைகளை இல்லாது ஒழிக்கும் 16 நாள் வேலைத்திட்டத்தின் கண்டாவளை பிரதேசத்துக்கான நிறைவு நிகழ்வு நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்றது.

பெண்கள் வாழ்வுரிமைக் கழகத்தால் முன்னெடுக்கப்பட்ட குறித்த வேலைத்திட்டம் கரைச்சி. கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் இடம் பெற்றன.

பெண்களுக்கு எதிரான வன்முறையிலிருந்து பாதுகாத்தல் மற்றும் விழிப்புணர்வூட்டும் வகையில் முன்னெடுக்கப்பட்ட 16 நாள் வேலைத்திட்டம் நேற்று கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் நிறைவு பெற்றது.

இறுதி நாளான நேற்றையதினம் பெண்கள் வாழ்வுரிமை கழகத்தின் இணைப்பாளர் வாசுகி வல்லிபுரம், பிரதேச செயலக பெண்கள் சிறுவர் பிரிவு உத்தயோகத்தர், உதவி திட்ட உத்தி



யோகத்தர், பெண்கள் வாழ்வுரிமை சிறுகுழு தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், கண்டாவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது அனைத்து இன, மத, சமய நல்லிணக்கத்தின் அடையாளமாக சமாதான வெள்ளை புறா பறக்க விடப்பட்டதுடன், பலூன்களும் பறக்கவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பூநகரி மண்ணித்தலை சிவாலய மீளுருவாக்க பணிகள் ஆரம்பம்

பூநகரி மண்ணித்தலை சிவாலயத்தை மீளுருவாக்கம் செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பூநகரி மண்ணித்தலை சிவாலயம் 1990 ஆம் ஆண்டு அழிவடைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

அதன்பின்னர் அதனைப் பேணி பாதுகாத்து வந்த நிலையில், மீளுருவாக்கம் செய்வதற்கு தற்போது இலங்கை தொல்லியல் திணைக்களம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

தொல்லியல் ஆய்வு உத்தியோகஸ்தர் வி.மணிமாறனின் நெறிப்படுத்தலில், தொல்லியல் அதிகாரிகளின் மேற்பார்வையில், மீளுருவாக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதில் யாழ்.பல்கலைக்கழக தொல்லியல் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோரும் பங்கேற்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# பிரபல திரைப்பட இயக்குநர் மரணம்

இந்நாட்டின் பிரபல திரைப்பட இயக்குநரான சுனில் சோமபீரிஸ் காலமாகியுள்ளார்.

அவரது குடும்பத்தினர் இதனை உறுதிப்படுத்தியுள்ளனர். தனது 72 ஆவது வயதில் அவர் காலமாகி உள்ளார்.

# தடுப்பூசிகளை பெற்றுக்கொள்வதை கட்டாயப்படுத்த சட்ட நடவடிக்கை

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

கொரோனா வைரஸ் (கொவிட் - 19) தொற்றுக்கு எதிராக 2 தடுப்பூசிகளை பெற்றுக்கொள்வதை கட்டாயப்படுத்துவதற்கான சட்ட நடவடிக்கைகள் எதிர்வரும் 2 அல்லது 3 மாதங்களில் மேற்கொள்ளப்படும் என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

எத்தகைய தடுப்பூசியையும் பெற்றுக்கொள்ளாத பெண் ஒருவர் நாட்டுக்கு வந்தமை அவர், ஒமிக்ரோன் திரிவு உள்ளமை உறுதி செய்யப்பட்டமை தொடர்பாகக்கண்டறியப்படவேண்டும் என்றும் அமைச்சர் கூறினார்.

கண்டியில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொடர்பில் புதிதாக கண்டறிப்பட்ட வைரஸ் திரிவு தொடர்பாக எதிர்கால நடவடிக்கைகள் நடைபெறும் விசேட கலந்துரையாடலில் தீர்மானங்கள் சில மேற்கொள்ளப்பட விருக்கின்றன எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

# வாகன இறக்குமதியும் இல்லை அரச ஊழியர் ஆள்சேர்ப்புமில்லை!

## பஸில் ராஜபக்ஷ திட்டவட்டம்

வாகன இறக்குமதிக்கு அடுத்த வருடத்திலும் அனுமதி வழங்கப்பட மாட்டாது என நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையில் நடைபெற்ற பால் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், அரச ஊழியர் ஆள்சேர்ப்பிற்கும் இடமளிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பாம்பு தீண்டி சாவடைந்த சிறுமியின் பெற்றோருக்கு வீடு



வாகரை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கட்டுமுறிவு கிராமத்தில் வருமானம் குறைந்த குடும்பம் ஒன்றுக்கு தேசிய வீடமைப்பு அதிகார சபையின் ஊடாக, புதிய வீட்டை அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கை இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தலைமையில் அண்மையில் ஆரம்பமானது.

பின்தங்கிய பிரதேசமான கட்டுமுறிவு கிராமத்தில், பாம்பு தீண்டி உயிரிழந்த ரவித்திரன் கிருத்திகா எனும் 4 வயது சிறுமியின் பெற்றோருக்கே இந்த வீடு அமைக்கப்படுகிறது.

இது தொடர்பான நிகழ்வில் வாகரை பிரதேச செயலக உயர் அதிகாரிகள், தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் அதிகாரிகள், இராஜாங்க அமைச்சரின் செயலாளர்கள், பிரதேச இணைப்புச் செயலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# யாழ். புதிய பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து 15 ஆம் திகதி முதல் நெடுந்தூர சேவைகள்

## முதல்வர் மணிவண்ணன் திட்டவட்டம்

தனியார் பஸ்களின் உள்ளூர், வெளியூர் மற்றும் கொழும்புக்கான இரவு நேர சேவைகள் என்பன எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் புதிய நெடுந்தூர பஸ் நிலையத்திலிருந்து ஆரம்பிக்கப்படும் என யாழ்ப்பாண மாநகர முதல்வர் அறிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு முதல்வர் நேற்று (வியாழக்கிழமை) அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

தனியார் பஸ்ஸின் உள்ளூர் சேவை பஸ்கள் நெடுந்தூர பஸ் நிலையத்தில் இருந்து புறப்பட்டு தற்போது இயங்கி வரும் இடங்களில் 10 நிமிடங்கள் தரித்து நின்று பயணிகளை ஏற்றிச் செல்லும்.

அதே நேரம் வெளியிடங்களில் இருந்து வரும் பிரயாணிகள் நெடுந்தூர பஸ் நிலையத்தில் இறக்கப்படுவர்.

இ.போ.ச. பஸ் நிலையத்திலிருந்து புறப்படும் வெளிமாவட்டங்களுக்கும் செல்லும் நீண்ட தூரத்துக்கு பயணிக்கும் இ.போ.ச. பஸ்கள் ஆஸ்பத்திரி வீதியினூடாக சத்திரச் சந்தியை அடைந்து அங்கிருந்து, கே.கே.எஸ். வீதியூடாக சென்று பிரதான வீதியை அடைந்து வெளிமாவட்டங்களுக்கான பயணத்தை மேற்கொள்ளும் அதேபோன்று, வெளிமாவட்டங்களில் இருந்து வரும் பஸ்களும் இந்தப் பாதையையே பயன்படுத்த வேண்டும் என்பதுடன் இந்தப் பாதை ஒழுங்குமுறை உடனடியாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இ.போ.ச. பஸ் நிலையத்திலிருந்து புறப்படும் வெளிமாவட்டங்களுக்குச் செல்லும், நீண்ட தூரத்துக்கு பயணிக்கும் பஸ்கள் ஆஸ்பத்திரி வீதியூடாக வேம்படிச் சந்திக்கு செல்வது தடை செய்யப்பட்டுள்ளது. - எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கொழும்பு நகரப் பகுதிகளில் வசிக்கும் 30 வயதுக்கு மேற்பட்டோருக்கு பூஸ்டர்

கொழும்பு நகரப் பகுதியில் வசிக்கும் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இன்று(வெள்ளிக்கிழமை) முதல் கொரோனா பூஸ்டர் தடுப்பூசி வழங்கப்படுகின்றது.

கொழும்பு மாநகர சபை இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்காவில் தயாரிக்கப்படும் பைஸர் தடுப்பூசி இதற்காகப் பயன்படுத்தப்படவுள்ளது.

இதேவேளை, கடந்த நவம்பர் மாதம் 17ஆம் திகதி முதல் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான பூஸ்டர் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.12.2021இல் வெளியிடப்பெற்றது.